# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2376/14 - 2024 මාර්තු මස 19 වැනි අඟහරුවාදා - 2024.03.19

*2376/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உபபிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, மாச்சு 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024, பெப்புருவரி 07 ஆம் திகதிய 24/0309/628/018 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024, பெப்புருவரி 26 ஆம் திகதிய, நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் கண்காணிப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அவ் விஞ்ஞாபனத்திற்கு 2024 பெப்புருவரி 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.


1A - PG 6678 — 404 (2024/03)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இவ் வர்த்தமானியில் இதன் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள 3.1 மற்றும் 3.2 ஆம் ஒழுங்குவிதிகள், திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கட்டாயப் பகுதியொன்றாக வெளியிடப்படுகின்றது.

3.1 மேலே குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, உரிய விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவரின் சிபாரிசின் அடிப்படையில் 87 ஆவது எச்.எஸ் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகன இறக்குமதிக்கான ஏனைய நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும்.

| எச்.எஸ் குறியீடு | விபரம் | அலகுகளின் எண்ணிக்கை | இறக்குமதியாளர் / பெறுநர் |
|---|---|---|---|
| 8703.21.54 | பிற, இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை (முச்சக்கர வண்டிகள் மாத்திரம்) | 05 | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |
| 8704.22.61 | ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை (குப்பை கம்பக்டர் டிரக் மாத்திரம்) | 01 | விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் |
| 8704.21.91 | பொருட்களை வைப்பதற்கும் மற்றும் நபர்கள் அமரும் வகையிலும் வேறாக்கப்பட்ட பாகங்களுடனான பிற வாகனங்கள், நான்கு வருடங்களுக்கு மேற்படாதவை (டபள் கெப்கள் மாத்திரம்) | 04 | கல்வியமைச்சின் PALAM/A வேலைத்திட்டம் |
| 8703.40.71 | மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை (07 இருக்கைகள் கொண்ட மோட்டார் வாகனங்கள் மாத்திரம்) | 01 | CHEC கொழும்பு துறைமுக நகர (தனியார்) நிறுவனம் |

3.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரச நிறுவனங்களினால், அன்பளிப்பாக அல்லது வேலைத்திட்ட ஒப்பந்த ஏற்பாடுகளுக்கமைய, நேரடிப் பாவனைக்காக மாத்திரம் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களை சுங்கத்தினால் விடுவிப்பதற்கு, இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரி செயலாளரின் சிபாரிசின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஒப்புதலின் கீழ் அனுமதி வழங்கப்படும்.

4. பின்னர் திருத்தம் செய்யப்பட்ட 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதி 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

4.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் 9 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரச அல்லது தனியார் வைத்தியசாலைகளின் நேரடிப் பாவனைக்காக அவ் ஒழுங்குவிதிகளில் V ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அம்புலன்ஸ் "அந்நிய செலாவணி செலவிடப்படாத" முறையின் கீழ் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் திறைசேரி செயலாளரின் சிபாரிசின் கீழ் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் (ICL) வழங்கப்பட வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் வேறு உரிய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்படும்.

6. மேலே ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 03-0170

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.